2024(2025/OL/61/T/Q/T-1

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | 2024 (2025)

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය

practice Paper

பயிற்சி வினாத்தாள்

# Geography
# புவியியல்
# භූගෝල විද්‍යාව



Question Paper - I, II | வினாப்பத்திரம் - I, II (தமிழ்)

Nenasa

மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு | භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education, Sri Lanka**

| 61 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය -අනුහුරු ප්‍රශ්න පත්‍රය - 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - பயிற்சி வினாத்தாள் - 2024 (2025)
**G. C. E. Ordinary Level Examination – practice paper - 2024 (2025)**

භූගෝල විද්‍යාව I, II
**புவியியல் I, II**
**Geography I, II**

*පැය තුනයි.*
*மூன்று மணித்தியாலம்*
*Three Hours*

*අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.*
*மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்*
*Additional Reading Time – 10 minutes*

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## புவியியல் I

* **இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது.**
* ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக **எல்லா வினாக்களுக்கும்** இவ்விடைத்தாளிலேயே விடை எழுதுக.

- **01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1. சமுத்திர ஓடு……………..வகை பாறைகளைக் கொண்டுள்ளது.(பசோல்ட்/கிரனைட்/தொலரைட்)
2. போக்லண்ட் தீவு ……………. சமுத்திரத்தில் அமைந்துள்ளது..(பசுபிக்/அத்திலாந்திக்/இந்து)
3. நொரின் 10 என்பது அதிக விளைச்சல் தரும்……………வகையாகும். (நெல்/கோதுமை/சோளம்)
4. மாகந்துர சேதன உரமத்திய நிலையம்……………………..மாவட்டத்தில் அமைந்துள்ளது. (இரத்தினப்புரி/களுத்துறை/குருணாகலை)
5. பொம்பை நகரம்…………………எரிமலை வெடிப்பினால் முழுமையாக அழிவடைந்தது. (விசுவியஸ்/பேலி/எட்னா)

- **6 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் "ச" ஐயும், பிழையாயின் "பி" ஐயும் சுற்றி வட்டம் வரைக.**


6. பருத்திப் புடைவைக் கைத்தொழிலானது விவசாய மூலப்பொருளை அடிப்படையாகக் கொண்டது.(ச / பி)
7. மொத்த நன்னீரில் 79% பனிப்போர்வை மற்றும் பனியாறுகளாக காணப்படுகிறது. (ச / பி)
8. இலங்கையின் காரீய உற்பத்தியில் 3 மாத்திரமே உள்நாட்டு நுகர்வுக்காக பயன்படுத்தப்படுகிறது.(ச / பி)
9. கிழக்காசிய கரையோரப் பகுதிக்கு அப்பால் உள்ள சமுத்திர பகுதிகளில் ஏற்படும் சூறாவளி வில்விலிஸ் என அழைக்கப்படுகின்றது. (ச / பி)
10. தம்பதெனியா வெற்றிலை ஏற்றுமதிக்கென உருவாக்கப்பட்ட ஒரு ஏற்றுமதி கிராமமாகும். (ச / பி)

**11 தொடக்கம் 16 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

11. மைக்ரோ வாகனப் பொருத்தும் தொழிற்சாலை……………………..அமையப்பெற்றுள்ளது..
12. இலங்கையின் பிரதான சுற்றுலா வலயங்களுள் மிகச் சிறிய சுற்றுலா வலயம்……………….ஆகும்.
13. பசும்பால் வள மத்திய நிலையம் ………….பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
14. புவியின் கற்கோளமானது ……………………பிரதான தகடுகளாலானது.
15. முகில்களுக்கும்.பூமிக்குமிடையே இடம்பெறும் மின்கவர்ச்சி விசை………………..எனப்படும்.
16. நதி முகத்துவாரம் மற்றும் ஏரிகளிலும்…………………… மீன்பிடி இடம் பெறும்.

- **கீழே தரப்பட்டுள்ள வரைபினை பயன்படுத்தி 17 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

இலங்கையில் பொருளாதார நடவடிக்கைகளில் பங்களிப்பு வழங்காதோர் சனத்தொகை(மாகாண அடிப்படையில்)-2012




மூலம்:- இலங்கை புள்ளி விபரவியல் திணைக்களம்,2012

17. இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளில் பங்களிப்பு வழங்காதோர் சனத்தொகை சதவீதம் அதிகமாக காணப்படுவது.....................மாகாணத்திலாகும்.
18. இலங்கையில் பொருளாதார நடவடிக்கைகளில் பங்களிப்பு வழங்காதோர் சனத்தொகை சதவீதம் குறைவாக காணப்படுவது.....................மாகாணத்திலாகும்.
19. வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பொருளாதார நடவடிக்கைகளில் பங்களிப்பு வழங்காதோர் சனத்தொகை சதவீதம்…..…………ஆகும்.

- **20 – 24 வரையுள்ள வினாக்களில் ‘அ’ நிரலிலுள்ள தகவல்களின் ஒழுங்கேற்ப ‘ஆ’ நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளமையைக் காட்டும் சரியான விடைக்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

20.

| 'அ' ஏரி | 'ஆ' விசேட பண்புகள் |
|---|---|
| 1. சுப்பிரியர் | A. மிக உயரமான இடத்தில் அமைந்துள்ளது. |
| 2. டிட்டிக்கா | B. உவர் நீர் ஏரி |
| 3. கஸ்பியன் | C. மிகப் பெரிய ஏரி |
| | D. ஆழமான ஏரி |

(1) ABC (2) ABD (3) CAB (4) DAC (…….)

21.

| 'அ' பயிர்வகை | 'ஆ' அதிகம் பரம்பியுள்ள பிரதேசம் |
|---|---|
| 1. இறப்பர் | A. மாத்தறை |
| 2. தேயிலை | B. களுத்துறை |
| 3. தென்னை | C. நுவரெலியா |
| | D. குருணாகல் |

(1) ACD (2) BCD (3) CBD (4) DCB (…….)

22.

| 'அ' துறைகள் | 'ஆ' உதாரணம் |
|---|---|
| 1. உற்பத்தி | A. ஊடுபயிர் வளர்ப்பு |
| 2. தொழினுட்பம் | B. எக்கோசவுண்ட் (Eco sounder) பயன்பாடு |
| 3. வர்த்தகம் | C. பூச்சி தொற்று நோய் பாதுகாப்பு |
| | D. புதிய பொதியிடல் முறைமை |

(1) ABD (2) BCD (3) CBA (4) CBD (…….)

23. 'அ' கணிய வகை / 'ஆ' பயன்பாடுகள்

1.பளிங்கடுக்கு பாறை
2. சுண்ணாம்பு கல்
3. காரீயம்

A. உர உற்பத்தி
B. சிலை நிர்மாணம்
C. சீமெந்து உற்பத்தி
D. மசகு எண்ணெய்

(1) ACD (2) BCD (3) CAB (4) DCB (…….)

24. 'அ' கணிய மணல் வகை / 'ஆ' பிரதேசங்கள்

1. இல்மனைட்
2. சர்கோன்
3. சிலிக்கா

A.மீரிகம
B. நிலாவெளி
C. மாரவில
D. புல்மோட்டை

(1) ABC (2) BCD (3) CAB (4) DAC (…….)

- **25 தொடக்கம் 36 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

25. இலங்கையின் மண் விருத்தி செயற்பாட்டில் முக்கிய தாக்கத்தினை ஏற்படுத்துவது.
(1) மழைவீழ்ச்சியின் அளவு (2) தாவரப்போர்வை
(3) தரைத்தோற்றம் (4) நுண்ணுயிர்களின் தொழிற்பாடுகள் (…….)

26. அபிவிருத்தியை அளவிடும் பழைய குறிகாட்டியொன்று.
(1) தலாவீத வருமானம் (2) பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்
(3) மனித அபிவிருத்திச் சுட்டெண் (4) மனித அமுக்கச் சுட்டெண் (…….)

27. பின்வருவனவற்றுள் இலங்கையின் நகர அபிவிருத்தி திட்டத்திற்கு பொருத்தமான விடை.
(1) 200 ஆடைத்தொழிற்சாலைகளின் திட்டம் (2) திவிநெகும செயற்றிட்டம்
(3) சமூகம் சார் குடிநீர் திட்டம் (4) குடிசை வீடுகளை அகற்றும் திட்டம் (…….)

28. பின்வருவனவற்றுள் உலோக கணியம், எரிபொருள் கணியம் மற்றும் உலோகமல்லாத கணியம் முறையே குறிக்கும் விடைத்தொகுதி.
(1) மக்னீசியம், நிலக்கரி, காரீயம் (2) இரும்புத்தாது, நிலக்கரி, மக்னீசியம்
(3) இரும்புத்தாது, சுண்ணக்கல், செம்பு (4) செம்பு, கணிய நெய், சிலிக்கா (…....)

29. உயிர்பல்லினத்தன்மை அழிவடைந்து மண்வளமிழத்தலுக்கு பிரதான காரணியாக அமைவது.
(1) சுரங்கமறுத்தல் (2) ஓரின பயிர் வளர்ப்பு முறைகள்
(3) முறையற்ற குடியிருப்புகள் (4) மீள் காடாக்க திட்டங்கள் (…….)

30. அயன மழைக்காடுகள் பரவி காணப்படாத பிரதேசமாக அமைவது.
(1) அமேசன் வடிநிலம் (2) மத்திய அமெரிக்கா
(3) தென் சீனா (4) கொங்கோ வடிநிலம் (…….)

31. சுங்கம், மீன்பிடி, புலம்பெயர்வு, ஆரோக்கியம் சார்ந்த சட்ட விதிமுறைகளை மீறுவோருக்கு தண்டனை வழங்குவதற்கு அரசின் முழு அதிகாரம் பெற்ற கடல் வலயம்.
(1) வரலாற்று நீர்ப் பிரதேசம் (2) ஆள்புலக் கடல் எல்லை
(3) தனித்துவ பொருளாதார வலயம் (4) வெளிப்புற வலயம் (…….)

32. பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய சரியான விடையை தெரிவு செய்க.
(A) தாவர இலைகளில் காணப்படும் நீரானது ஆவியாக்கத்தினால் மேலெழுகிறது.
(B) படிவு வீழ்ச்சியின் மூலம் கிடைக்கும் நீர் முழுமையாக கழுவுநீரோட்டமாக மாற்றப்படுகிறது.
(C) கிணறுகளுக்கான நீர் கழுவு நீரோட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறுகிறது.
(D) நீரியல் வட்டத்தின் மூலம் நீரானது திண்ம, திரவ, வாயு நிலைக்கு மாற்றப்படுகிறது.
(1) A மாத்திரம் சரியானது (2) A மற்றும் C சரியானது.
(3) B மற்றும் D சரியானது (4) D மாத்திரம் சரியானது. (…….)

33. புவியின் மொத்த நிலத்திணிவில் 20% இனை விட அதிகமான நிலத்திணிவினை கொண்டுள்ள கண்டம்.
(1) ஆசியா (2) ஆபிரிக்கா
(3) ஐரோப்பா (4) வட அமெரிக்கா (…….)

34. உலகில் பாற்பண்ணை கைத்தொழில் அதிகமாக இடம்பெறும் ஐரோப்பிய நாடொன்று.
(1) இத்தாலி (2) போர்த்துக்கல்
(3) டென்மார்க் (4) பல்கேரியா (…….)

35. ஐக்கிய இராச்சியத்தில் மோட்டார் வாகன உற்பத்தி மத்திய நிலையங்களை மாத்திரம் கொண்டுள்ள விடைத்தொகுதி.
(1) டெட்ரோய்ட், நியு இங்கிலாந்து, பிட்ஸ்பேர்க்
(2) குஷ்நெட்ஸக், மொஸ்கோ, யூரல் வலயம்
(3) பர்மிங்காம்,தென் வேலஸ்,லங்காஷயர்
(4) கிளாஸ்கோ,சாங்சுவான்,கியாட்டோ (…......)

36. மேல்மாகாணத்தில் அமைந்துள்ள நெல்லாராய்ச்சி நிறுவனம்.
(1) கண்ணொருவ (2) பத்தலகொட
(3) மகாஇலும்பல்லம (4) போம்புவலை (……..)

- **A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து 37 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

A - 1. சூழல் சமநிலை
2. காடழிப்பு

B - 1. கடல் மட்டத்தில் இருந்தான தூரம்
2. வளி அமுக்கம்

C - 1. புதுப்பிக்கக்கூடிய சக்திவள பயன்பாடு
2. அணுசக்தி பரிசோதனை

D – 1. மானிட செயற்பாடுகள்
2. அனர்த்தங்களின் தீவிரதன்மை

37. இரண்டாவதன் அதிகரிப்பிற்கு, முதலாவதன் வீழ்ச்சி காரணமான தலைப்பு சோடி..
(1) A (2) B (3) C (4) D (…….)

38. முதலாவது அதிகரிக்கும் போது இரண்டாவதும் அதிகரிப்பதும், முதலாவது வீழ்ச்சியடையும் போது இரண்டாவதும் வீழ்ச்சியடையும் தலைப்பு சோடி.
(1) A (2) B (3) C (4) D (…….)

39. இரண்டாவதன் வீழ்ச்சி முதலாவதன் அதிகரிப்பிற்கு காரணமான தலைப்பு சோடி.
(1) A (2) B (3) C (4) D (……..)

40. முதலாவது மற்றும் இரண்டாவதற்குமிடையே எவ்வித தொடர்புகளுமற்ற தலைப்பு சோடி.
(1) A (2) B (3) C (4) D (…….)

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 61 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - පෙරහුරු ප්‍රශ්න පත්‍රය - 2024 (2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- பயிற்சி வினாப்பத்திரம்- 2024 (2025)
G. C. E. Ordinary Level Examination - practice paper - 2024 (2025)

| | |
|---|---|
| භූගෝල විද්‍යාව | I, II |
| புவியியல் | I, II |
| Geography | I, II |

புவியியல் II

- ❖ இவ்வினாத்தாள் I II எனும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
- ❖ பகுதி I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- ❖ பகுதி II இலிருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்
- ❖ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்.

## பகுதி - I

1. **(அ) உமக்கு தரப்பட்டுள்ள 1:50000 அளவுதிட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் பகுதியை நன்கு அவதானித்து, அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் பயன்படுத்துக.**

- **இலக்கம் (i)தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

(i) இலக்கம் ① இனால் காட்டப்படும் இயற்கை தாவர வகை யாது?
(புல்நிலம் /சேற்று நிலம் /கண்டல் தாவரம்) **(1 புள்ளி)**

(ii) இலக்கம் ② இனால் காட்டப்படும் கோடு யாது?
(சமஆழக்கோடு/சம மழைவீழ்ச்சி கோடு/சமவுயரக்கோடு) **(1 புள்ளி)**

(iii) இலக்கம்③ இனால் காட்டப்படும் எல்லை யாது?
(மாவட்ட எல்லை/பிரதேச செயலாளர் பிரிவு/கிராம சேவகர் பிரிவு) **(1 புள்ளி)**

(iv) படப்பிரதேசத்தில் இளஞ்சிவப்பு நிறத்தில் காட்டப்படும் அம்சம் யாது?
(சரணாலயம்/அமைக்கப்பட்ட பிரதேசம்/முதலீட்டு வலயம்) **(1 புள்ளி)**

(v) இலக்கம்④ இனால் குறிப்பிடப்படும் அம்சம் யாது? **(1 புள்ளி)**

(vi) இலக்கம்⑤ இனால் காட்டப்படும் குறியீடு யாது? **(1 புள்ளி)**

(vii) இலக்கம்⑥ இனால் காட்டப்படும் பயிர் வகையை பெயரிடுக. **(1 புள்ளி)**

(viii) இலக்கம் ⑦ மூலம் காட்டப்படும் சதுரத்தினுள் மேற்கொள்ளக்கூடிய பொருளாதார நடவடிக்கை ஒன்றினை பெயரிடுக. **(1 புள்ளி)**

- **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் “ச” எனவும், பிழையாயின் “பி” எனவும் விடைத்தாளில் குறிப்பிடுக.**

(ix) படப்பிரதேசத்தில் முஸ்லிம் இனத்தவர்களே அதிகமாக வாழுகின்றனர் **(1 புள்ளி)**

(x ) இலக்கம் ⑧ மூலம் காட்டப்படும் சதுரத்தில் காணப்படுவது நேர்கோட்டு குடியிருப்பாகும் **(1 புள்ளி)**

**(ஆ) உமக்கு தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக எழுதவதற்காக உலகப் புறவுருவ படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் பயன்படுத்துக.**

- **இலக்கம் (i) (தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவுசெய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

(i) கலிபோர்னியா **Ⓐ, Ⓑ, Ⓒ**

(ii) திமோர் கடல் **Ⓓ, Ⓔ, Ⓕ**

(iii) கைய்ரோ நகரம் **Ⓖ, Ⓗ, Ⓘ**

(iv) தஸ்மேனியா **Ⓚ, Ⓛ, Ⓜ**

(v) காரகற்றோவா எரிமலை **Ⓟ, Ⓠ, Ⓡ** **(5 புள்ளிகள்)**

**(இ) உமக்கு தரப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக எழுதவதற்காக இலங்கை புறவுருவ படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் பயன்படுத்துக.**

- **(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவுசெய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக**

(i) மாத்தளை மாவட்டம் **Ⓐ, Ⓑ, Ⓒ**

(ii) அறுகம்பே குடா **Ⓓ, Ⓔ, Ⓕ**


(iii) லக்விஜய சக்தி நிலையம் **Ⓖ, Ⓗ, Ⓘ**

(iv) பலாலி விமான நிலையம் **Ⓛ, Ⓜ, Ⓝ**

(v) மித்தெனிய **Ⓟ, Ⓠ, Ⓡ** **(5 புள்ளிகள்)**

## பகுதி II

**02.** தரப்பட்டுள்ள வளிமண்டல கட்டமைப்பினை காட்டும் வரைபடத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




(i) இவ்வரைப்படத்தின் படி **A** மற்றும் **D** ஆகிய படைகளை பெயரிடுக. **(2 புள்ளிகள்)**

(ii) (a) சூரியனிலிருந்து வரும் புற ஊதாக்கதிர்களை உறிஞ்சிக்கொள்ளும் வாயுவை கொண்டுள்ள **படையினையும்,** அதன் **எழுத்தினையும்** சரியாக குறிப்பிடுக.

(b) படை C இனது **இரு** சிறப்பியல்புகளை குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) வளிக்கோளம் மாசடைவதற்கு காரணமான **இரு** பௌதீக காரணிகளையும், **இரு** மானிட காரணிகளையும் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை விளக்குக. **(5 புள்ளிகள்)**

**03.** (i) பால் உற்பத்தி பொருட்கள் **இரண்டினை** பெயரிடுக. **(2 புள்ளிகள்)**

(ii) இடைவெப்ப வலய நாடுகளில் பாற்பண்ணைகள் அதிகமாக பரம்பிக் காணப்படுவதற்கான **மூன்று** காரணிகளை குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) (a) அண்மை காலமாக மீனவர்கள் எதிர்நோக்கும் **இரு** பிரச்சினைகளை குறிப்பிடுக. **(2 புள்ளிகள்)**

(b) மீன்பிடி கைத்தொழிலை மேம்படுத்துதலானது இலங்கைப் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவமானதாக அமையும் **இரு** விதங்களை குறிப்பிட்டு விளக்குக. **(5 புள்ளிகள்)**

04. (i) பொருத்தும் கைத்தொழில் என்றால் என்ன? **(2 புள்ளிகள்)**

(ii) தற்போது மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னணி வகிக்கும் **மூன்று** ஆசிய நாடுகளை பெயரிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) (a) இலங்கையின் மோட்டார் வாகன கைத்தொழில் எதிர்கொள்ளும் **இரு** சவால்களை குறிப்பிடுக.

(b) இலங்கையின் பொருளாதாரத்திற்கு கைத்தொழில் துறை மூலம் கிடைக்கப்பெறும் பங்களிப்பினை பின்வரும் தலைப்புகளின் கீழ் சுருக்கமாக விளக்குக.

- வேலைவாய்ப்பு
- அந்நிய செலாவணி ஈட்டுதல். **(5 புள்ளிகள்)**

**05.** (i) உலக சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு,
(a) பிறப்பினால் கிடைக்கப்பெறும் பண்பு
(b) பிறப்பின் பின்னர் கிடைக்கப்பெறும் பண்பு **ஒவ்வொன்றினை** பெயரிடுக. **(2 புள்ளிகள்)**

(ii) உலகின் சனத்தொகை கூடிய வலயங்கள் உருவாக பங்களிப்பு செய்யும் **மூன்று** காரணிகளை பெயரிடுக. **(3 புள்ளிகள்)**


(iii) இலங்கையின் சனத்தொகை கட்டமைப்பின் **இரு** விசேட அம்சங்களை குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்று** இலங்கையின் பொருளாதாரத்தில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதை சுருக்கமாக விளக்குக.
**(5 புள்ளிகள்)**

**06.** (i) இலங்கையில் அடிக்கடி வெள்ளத்தினால் பாதிக்கப்படும் **இரு** நதிக்கரையோர நகரங்களை பெயரிடுக. **(2 புள்ளிகள்)**

(ii) வெள்ள அபாயத்தை குறைக்க மேற்கொள்ளககூடிய **மூன்று** நடவடிக்கைகளை குறிப்பிடவும் **(3 புள்ளிகள்)**

(iii) வெள்ள அனர்த்தம் ஏற்படும் போது அனர்த்த முகாமைத்துவ வட்டத்திற்கமைய அனர்த்தத்தை எதிர்கொள்ளும் கட்டத்தில் .(Response) மேற்கொள்ளக்கூடிய **இரு** நடவடிக்கைகளை உதாரணங்களின் மூலம் சுருக்கமாக விளக்குக **(5 புள்ளிகள்)**

**07.** தரப்பட்டுள்ள உலக காலநிலை வலயங்களை காட்டும் வரைபடத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




(i) படத்தில் **A** மற்றும் **B** என்பவற்றில் காட்டப்பட்டுள்ள காலநிலை வலயங்களுக்குரித்தான **ஒவ்வொரு** காலநிலை வகையினை குறிப்பிடுக. **(2 புள்ளிகள்)**

(ii) **C** காலநிலை வலயத்தினுள் மனித நடவடிக்கைகளை பாதிக்கின்ற **மூன்று** காரணிகளை குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) (a) புவிவெப்பமடைதலினால் ஏற்படக்கூடிய **இரு** சூழல் பாதிப்புகளை குறிப்பிடுக.
(b) காலநிலை மாற்றத்தினை கட்டுப்படுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் **இரு** நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குக. **(5 புள்ளிகள்)**

08. (i) இலங்கையில் சக்திவலுவினை உற்பத்தி செய்யும் **இரண்டு** சக்தி மூலங்களை பெயரிடுக.
**(2 புள்ளிகள்)**

(ii) பின்வரும் நதிகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள **ஒவ்வொரு** மின்சக்தி நிலையங்களை பெயரிடுக.
(a) வளவை கங்கை
(b) கல் ஓயா
(c) மகாவலி கங்கை **(3 புள்ளிகள்)**

(iii) மாற்றுசக்தி வளப்பயன்பாடானது நாடொண்டின் அபிவருத்தியில் செல்வாக்கு செலுத்தும் விதத்தினை **இரு** உதாரணங்களின் மூலம் விளக்குக. **(5 புள்ளிகள்)**

புவியியல் II

Geography II

1· (அ)

I. ------------------------------------------------------------------------------------------

II. ------------------------------------------------------------------------------------------

III. ------------------------------------------------------------------------------------------

IV. ------------------------------------------------------------------------------------------

V. ------------------------------------------------------------------------------------------

VI. ------------------------------------------------------------------------------------------

VII. ------------------------------------------------------------------------------------------


VIII. ------------------------------------------------------------------------------------------

IX ------------------------------------------------------------------------------------------

X. ------------------------------------------------------------------------------------------

/10

**(ஆ)**




N

(i)


(ii)

(iii)

(iv)

(v)

**(இ)**




N

(i)


(ii)

(iii)

(iv)

(v)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - மாதிரி வினாப்பத்திரம் - 2024 (2025)




Scale 1:50,000